ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ தன்னேராயிரம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தன்னேராயிரம் ॥

## அன்னை கண்ணனுக்கு இன்னமுதன்றி அம்மந்தாரேன் எனல்

‡தன் நேர் ஆயிரம் பிள்ளைகளோடு⋆
தளர்நடையிட்டு வருவான்⋆
பொன் ஏய் நெய்யொடு பால் அமுதுண்டு⋆ ஒரு
புள்ளுவன் பொய்யே தவழும்⋆
மின் நேர் நுண்ணிடை வஞ்சமகள் கொங்கை
துஞ்ச⋆ வாய் வைத்த பிரானே!⋆
அன்னே! உன்னை அறிந்து கொண்டேன்⋆ உனக்-
கஞ்சுவன் அம்மம் தரவே (1)

பொன்போல் மஞ்சனம் ஆட்டி அமுதூட்டிப்
போனேன்⋆ வருமளவிப்பால்⋆
வன்பாரச் சகடம் இறச் சாடி⋆
வடக்கில் அகம் புக்கிருந்து⋆
மின்போல் நுண்ணிடையால் ஒரு கன்னியை⋆
வேற்றுருவம் செய்து வைத்த⋆
அன்பா! உன்னை அறிந்து கொண்டேன்⋆ உனக்-
கஞ்சுவன் அம்மம் தரவே (2)

கும்மாயத்தொடு வெண்ணெய் விழுங்கிக்⋆
குடத் தயிர் சாய்த்துப் பருகி⋆
பொய்ம் மாய மருதான அசுரரைப்⋆
பொன்றுவித்தின்று நீ வந்தாய்⋆
இம் மாயம் வல்ல பிள்ளை நம்பீ!⋆ உன்னை
என்மகனே என்பர் நின்றார்⋆
அம்மா! உன்னை அறிந்து கொண்டேன்⋆ உனக்-
கஞ்சுவன் அம்மம் தரவே (3)

மை ஆர் கண் மட வாய்ச்சியர் மக்களை⋆
    மையன்மை செய்தவர் பின் போய்⋆
கொய்யார் பூந்துகில் பற்றித் தனி நின்று⋆
    குற்றம் பல பல செய்தாய்⋆
பொய்யா! உன்னைப் புறம் பல பேசுவ⋆
    புத்தகத்துகுள கேட்டேன்⋆
ஐயா! உன்னை அறிந்து கொண்டேன்⋆ உனக்-
    கஞ்சுவன் அம்மம் தரவே (4)

முப்போதும் கடைந்தீண்டிய வெண்ணெயி-
    னோடு⋆ தயிரும் விழுங்கி⋆
கப்பால் ஆயர்கள் காவில் கொணர்ந்த⋆
    கலத்தொடு சாய்த்துப் பருகி⋆
மெய்ப்பால் உண்டழு பிள்ளைகள் போல⋆ நீ
    விம்மி விம்மி அழுகின்ற⋆
அப்பா! உன்னை அறிந்து கொண்டேன்⋆ உனக்-
    கஞ்சுவன் அம்மம் தரவே (5)

கரும்பார் நீள் வயல் காய் கதிர்ச் செந்நெலைக்⋆
    கற்றா நிரை மண்டித் தின்ன⋆
விரும்பாக் கன்றொன்று கொண்டு⋆ விளங்கனி
    வீழ எறிந்த பிரானே!⋆
சுரும்பார் மெங்குழல் கன்னி ஒருத்திக்குச்⋆
    சூழ் வலை வைத்துத் திரியும்⋆
அரம்பா! உன்னை அறிந்து கொண்டேன்⋆ உனக்-
    கஞ்சுவன் அம்மம் தரவே (6)

மருட்டார் மென்குழல் கொண்டு பொழில் புக்கு⋆
    வாய்வைத்தவ் வாயர்தம் பாடி⋆
சுருட்டார் மென்குழல் கன்னியர் வந்துன்னைச்⋆
    சுற்றும் தொழ நின்ற சோதி!⋆
பொருட்டாயம் இலேன் எம்பெருமான்!⋆ உன்னைப்
    பெற்ற குற்றம் அல்லால்⋆ மற்றிங்கு

அரட்டா! உன்னை அறிந்து கொண்டேன்⋆ உனக்-
கஞ்சுவன் அம்மம் தரவே (7)

வாளா வாகிலும் காணகில்லார்⋆ பிறர்
மக்களை மையன்மை செய்து⋆
தோளால் இட்டவரோடு திளைத்து⋆ நீ
சொல்லப் படாதன செய்தாய்⋆
கேளார் ஆயர் குலத்தவர் இப் பழி
கெட்டேன்!⋆ வாழ்வில்லை⋆ நந்தன்
காளாய்! உன்னை அறிந்து கொண்டேன்⋆ உனக்-
கஞ்சுவன் அம்மம் தரவே (8)

தாய்மார் மோர் விற்கப் போவர்⋆ தகப்பன்மார்
கற்றா நிரைப் பின்பு போவர்⋆
நீ ஆய்ப்பாடி இளங்கன்னிமார்களை⋆
நேர்படவே கொண்டு போதி⋆
காய்வார்க்கென்றும் உகப்பனவே செய்து⋆
கண்டார் கழறத் திரியும்⋆
ஆயா! உன்னை அறிந்து கொண்டேன்⋆ உனக்-
கஞ்சுவன் அம்மம் தரவே (9)

தொத்தார் பூங்குழல் கன்னி ஒருத்தியைச்⋆
சோலைத் தடம் கொண்டு புக்கு⋆
முத்தார் கொங்கை புணர்ந்திரா நாழிகை⋆
மூவேழு சென்றபின் வந்தாய்⋆
ஒத்தார்க்கொத்தன பேசுவர்⋆ உன்னை
உரப்பவே நான் ஒன்றும் மாட்டேன்⋆
அத்தா! உன்னை அறிந்து கொண்டேன்⋆ உனக்-
கஞ்சுவன் அம்மம் தரவே (10)

‡காரார் மேனி நிறத்தெம் பிரானைக்⋆
கடி கமழ் பூங்குழல் ஆய்ச்சி⋆
ஆரா இன்னமுதுண்ணத் தருவன் நான்⋆
அம்மம் தாரேன் என்ற மாற்றம்⋆

பாரார் தொல் புகழான் புதுவை மன்னன்⋆
  பட்டர்பிரான் சொன்ன பாடல்⋆
ஏரார் இன்னிசை மாலைகள் வல்லார்⋆
  இருடீகேசன் அடியாரே (11)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥